# கம்ப்யூட்டர் கிராபிக் டிசைனர்ஸ் கலர் கைடு

இதுபோன்ற புத்தகம் இந்தியாவில் வெளியாவது இதுவே முதல் முறையாகும். பிராசஸ் கலர் எனப்படும் அச்சு முறைக்கான வண்ணக்கலவைகளை உருவாக்கும் வழிமுறைகள் இதில் தரப்பட்டுள்ளன. கணினி திரையில் வண்ணங்களைப் பார்ப்பதற்கும், அச்சில் பெறுவதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. அச்சில் வண்ணங்களை சரியாகப் பெறுவது என்பது சற்று கடினமான செயலாகும். இதற்காக அச்சில் உருவாக்கப்பட்ட 1000க்கும் அதிகமான வண்ணக்கலவைகள் இந்தப் புத்தகத்தில் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நிறமும் பிராசஸ் கலர்களான சயான், மெஜன்டா, யெல்லோ மற்றும் பிளாக் ஆகியவற்றின் எத்தனை சதவீதம் கொண்டுள்ளன என்பது இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் கணினியின் திரை கருப்பு வெள்ளையாக இருந்தால்கூட பரவாயில்லை. இதில் கொடுக்கப்பட்டுள்ள விகிதத்தில் கலவையை கொடுத்தால் ஆப்செட் அச்சுமுறையில் குறிப்பிட்ட அந்த நிறத்தை பெற்றுவிட முடிகிறது.

இரண்டு மெல்லிய வண்ணங்கள், இரண்டு மற்றும் மூன்று அடர் வண்ணங்கள், தனித்தனி நிறங்கள் என்று பல்வேறு தொகுப்புகள் இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து நிறக்கலவைகளும் அப்படியே தனித்தனி ஜேபெக் ஃபைல்களாக ஒரு குறுவட்டிலும் கொடுக்கப்படுகின்றன. இதனால் எண்களைக் கொடுத்து கலப்பதுகூட தேவையில்லை; ஐட்ராப்பர் கருவியை பயன்படுத்தி நேரடியாக குறிப்பிட்ட வண்ணத்தைப் பெற்றுவிட முடிகிறது.

ஒவ்வொரு கணினி வரைகலைஞரும் வைத்திருக்க வேண்டிய புத்தகமாகும். இதே போன்ற வெளிநாட்டுப் புத்தகங்கள் குறைந்தது 4500 இந்திய ரூபாய்களுக்குக் கிடைக்கின்றன. இந்தப் புத்தகம் மிகவும் குறைவான விலையில், அவற்றின் தரத்திற்கு இணையாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த புத்தகத்தில் மொத்தம் 110 பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் குறுவட்டு ஒன்று தரப்படுகிறது. புத்தகத்தின் அளவு டெமி 1/8 (உயரம் : 21 செமீ; அகலம் : 14 செமீ) ஆகும்.

ஐஎஸ்பிஎன் : 9781-908318-8-8